**டிசம்பர் – 04**

# TNPSC துளிகள்

- மேகாலயாவில் இயங்கி வரும் ஒரு கிளர்ச்சிக் குழுவான 'ஹைனிவெட்ரெப் தேசிய விடுதலை மன்றம்' (எச்.என்.எல்.சி) மீது மத்திய உள்துறை அமைச்சகம் ஒரு தடையை விதித்துள்ளது.
- மத்திய பெருநிறுவன விவகாரத் துறை அமைச்சகமானது 'முறையாக இயங்கும் முக்கியமான நிதி சேவை வழங்குநர்களை' நொடித்தல் மற்றும் திவால் குறியீட்டுக் கட்டமைப்பு (Insolvency and Bankruptcy Code) வரம்பிற்குள் கொண்டு வருவதற்கான கட்டமைப்பை வழங்கும் விதிகளை வெளியிட்டுள்ளது.
- செபாஸ்டியன் பினேரா தலைமையிலான சிலி அரசாங்கமானது ஒரு புதிய அரசியல் சாசன அமைப்பை உருவாக்குவதற்காக 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வாக்கெடுப்பு நடத்த உள்ளது. தற்போதைய அரசியலமைப்பு சாசனமானது 1980 ஆம் ஆண்டில் அகஸ்டோ பினோசே தலைமையிலான இராணுவ அரசாங்கத்தால் இயற்றப்பட்டது.
- ஐரோப்பிய முதலீட்டு வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதித் துறை ஆகியவை 2021 ஆம் ஆண்டின் இறுதியில் எண்ணெய், எரிவாயு மற்றும் நிலக்கரித் திட்டங்களுக்கு நிதியளிப்பதை நிறுத்த உள்ளன.
- இந்தியா-ஐரோப்பா 29 வர்த்தக மன்றத்தின் 5வது பதிப்பானது சமீபத்தில் புது தில்லியில் நடைபெற்றுள்ளது. இது இந்தியாவின் மிகப்பெரிய ஐரோப்பிய வர்த்தகத் தளமாகும்.
    - இது தொழில்துறை அமைப்பான இந்தியத் தொழில்துறை கூட்டமைப்பு மற்றும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## தேசிய உளவுத்துறை கட்டமைப்பு (NATGRID)

- தேசிய உளவுத்துறை கட்டமைப்பு (National Intelligence Grid – NATGRID) திட்டமானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் செயல்பட உள்ளது.
- 2008 ஆம் ஆண்டு மும்பைத் தாக்குதலுக்குப் பிறகு இது தொடங்கப்பட்டது.
- NATGRID அமைப்பானது உளவுத்துறை மற்றும் விசாரணை அமைப்புகளை இணைக்கின்றது.
- உளவுத்துறை உள்ளீடுகளை உருவாக்குவதற்காக தொலைத் தொடர்பு, வரிப் பதிவேடுகள், வங்கி, குடியேற்றம் உள்ளிட்ட 21 தரவு வழங்கும் நிறுவனங்களிலிருந்துப் பெறப்படக் கூடிய 10 பயனர் நிறுவனங்கள் சில தரவு தளங்களுடன் சுயாதீனமாக இணைக்கப்பட இருக்கின்றன.
- NATGRID அமைப்பின் தரவு மீட்பு மையமானது பெங்களூரு, கர்நாடகாவில் கட்டப் பட்டுள்ளது. அதன் தலைமையகத்தின் கட்டுமானமானது டெல்லியில் நிறைவடையும் தருவாயில் உள்ளது.
- நிகழ்நேர அடிப்படையில் NATGRID அமைப்பின் தரவை அணுகக்கூடிய 10 முகவர்கள் பின்வருமாறு:
    - உளவுத்துறை (Intelligence Bureau - IB)
    - ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு (Research & Analysis Wing - R&AW)

- மத்தியப் புலனாய்வு பிரிவு (Central Bureau of Investigation - CBI)
- அமலாக்க இயக்குநரகம் (Enforcement Directorate - ED)
- வருவாய் நுண்ணறிவு இயக்குநரகம் (Directorate of Revenue Intelligence - DRI)
- நிதியியல் நுண்ணறிவுப் பிரிவு (Financial Intelligence Unit - FIU)
- மத்திய நேரடி வரிகள் வாரியம் (Central Board of Direct Taxes - CBDT)
- மத்திய கலால் மற்றும் சுங்க வாரியம் (Central Board of Excise and Customs - CBEC)
- மத்திய கலால் மற்றும் நுண்ணறிவு இயக்குநரகம் (Directorate General of Central Excise and Intelligence - DGCEI)
- போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பணியகம் (Narcotics Control Bureau - NCB)

# சர்வதேசச் செய்திகள்

## 2019 ஆம் ஆண்டிற்கான சர்வதேசக் கல்விப் பரிமாற்றம் குறித்த திறந்த நிலை அறிக்கை

- இது அமெரிக்காவில் படிக்கும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை குறித்த தகவல்களையும் தரவுகளையும் வழங்குகின்றது.
- தொடர்ச்சியாக பத்தாவது ஆண்டாக, அமெரிக்காவிற்கு வெளிநாடுகளில் இருந்து கல்வி பயில வரும் சர்வதேச மாணவர்களில் சீனாவைச் சேர்ந்த மாணவர்கள் அதிக அளவில் உள்ளனர்.
- அமெரிக்காவில் உள்ள இந்திய மாணவர்களின் எண்ணிக்கையானது முந்தைய ஆண்டை விட சுமார் 3 சதவீதம் அதிகரித்து 202,014 ஆக அதிகரித்துள்ளது.

## வருகையின் போது நுழைவு இசைவு வழங்கும் வசதி

- ஐக்கிய அரபு அமீரக நாட்டினருக்கு வருகையின் போது நுழைவு இசைவு வழங்கும் வசதியை இந்திய அரசு விரிவுபடுத்தியுள்ளது.
- மேலும், பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த ஐக்கிய அரபு அமீரக நாட்டின் மக்கள் இந்தத் திட்டத்திற்குத் தகுதி பெற மாட்டார்கள்.
- இந்தியாவால் வருகையின் போது பெறப்படும் நுழைவு இசைவு வழங்கும் வசதி வழங்கப்படுகின்ற மற்ற இரு நாடுகள் ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகும்.
- இருப்பினும், இந்தியா 170 நாடுகளின் குடிமக்களுக்கு மின்னணு நுழைவு இசைவு (இ-விசா) வசதியை விரிவுபடுத்தி இருக்கின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## TRACE மேட்ரிக்ஸ்

- உலகின் முன்னணி லஞ்ச ஒழிப்பு தர நிர்ணய அமைப்பான டிரேஸ் இன்டர்நேஷனல் ஆனது, 2019 ஆம் ஆண்டிற்கான "TRACE லஞ்ச அபாய மேட்ரிக்ஸின்" (TRACE மேட்ரிக்ஸ்) பதிப்பை வெளியிட்டுள்ளது.
- TRACE மேட்ரிக்ஸ் என்பது 200 நாடுகள், ஆட்சிப் பிரதேசங்கள் மற்றும் தன்னாட்சி & பகுதி தன்னாட்சிப் பிராந்தியங்களில் உள்ள வணிக லஞ்ச அபாயத்தை அளவிடக்

கூடிய ஒரு உலகளாவிய வர்த்தக லஞ்ச அபாய மதிப்பீட்டுக் கருவியாகும்.

- மொத்த அபாய மதிப்பெண் 48 உடன், அண்டை நாடான சீனாவை விட இந்தியா சிறந்த நிலையில் உள்ளது. சீனாவின் மதிப்பெண் 59 ஆகும்.
- மிகக் குறைந்த லஞ்ச அபாயம் கொண்ட நாடுகள்: நியூசிலாந்து, நார்வே, டென்மார்க், சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகியவையாகும்.
- அதிக லஞ்ச அபாயம் கொண்ட நாடுகள்: சோமாலியா, தென் சூடான், வட கொரியா, ஏமன் மற்றும் வெனிசுலா ஆகியவையாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## வியாழன் கோளின் துணைக் கோள் - யூரோபா

- முதன்முறையாக, நாசாவின் விஞ்ஞானிகள் வியாழனின் மிகவும் குளிர்ந்த துணைக் கோளான யூரோபாவின் மேற்பரப்பில் நீராவி இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த நீராவியானது உலகின் மிகப்பெரிய தொலைநோக்கிகளில் ஒன்றான ஹவாயில் உள்ள தொலைநோக்கி மூலம் அளவிடப்பட்டது.
- முதன்முதலில் 1979 ஆம் ஆண்டில் வாயேஜர் விண்கலப் பயணங்களில் ஒன்று இந்த துணைக் கோளை அடைந்தது.
- வியாழன் கிரகத்துக்கு மொத்தம் 79 துணைக்கோள்கள் உள்ளன.
- சூரியனில் இருந்து வியாழன் ஐந்தாவது கிரகம் ஆகும். மேலும் சூரியக் குடும்பத்தில் இது மிகப்பெரிய கிரகமாகும்.

## பிரித்வி II

- இந்தியா தனது உள்நாட்டில் உருவாக்கிய அணுசக்தி திறன் கொண்ட பிரித்வி - 2 ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதனை செய்தது.
- இது இந்திய இராணுவத்தின் பயனர் சோதனையின் ஒரு பகுதியாக இரவில் சோதனை செய்யப் பட்டது.
- இவை இரவுநேரத்தில் இரண்டாவது முறையாக நடத்தப்படும் பிரித்வி - 2 வகை ஏவுகணையின் சோதனைகளாகும்.
- ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில், வீலர் தீவு என்று முன்னர் அறியப்பட்ட அப்துல் கலாம் தீவில் உள்ள சந்திப்பூர் ஒருங்கிணைந்த சோதனை மையத்தில் நடமாடும் ஏவு வாகனத்தில் இருந்து இந்த சோதனைகள் நடத்தப் பட்டன.

### *பிரித்வி 2 ஏவுகணை பற்றி*

- இது 350 கி.மீ வரம்பு கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் தந்திரோபாய ஏவுகணை ஆகும்.
- இது ஒரு ஒற்றை நிலை திரவ எரிபொருள் கொண்ட ஏவுகணையாகும்.
- ஒருங்கிணைந்த வழிகாட்டப்பட்ட ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு உள்நாட்டில் உருவாக்கிய இந்தியாவின் முதல் ஏவுகணை இதுவாகும்.
- இது 500 முதல் 1,000 கிலோ அளவுடைய வெடிகுண்டுகளை சுமக்கும் திறன் கொண்ட வழக்கமான மற்றும் அணுசக்தி ஏவுகணை ஆகும்.
- இது இந்தியாவின் மூலோபாயப் படைகளால் பயன்படுத்தப் படுகின்றது.

- இது இந்தியப் பாதுகாப்புப் படையில் 2003 ஆம் ஆண்டில் சேர்க்கப் பட்டது

### எரியூட்டுதல் (Lighting) பற்றிய ஆறாவது சர்வதேசக் கருத்தரங்கம் (iSoL)

- மத்திய கனரக தொழில்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தானியங்கித் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மையமானது, எரியூட்டுதல் தொடர்பான ஒரு சர்வதேசக் கருத்தரங்கத்தை (International Symposium on lighting - iSoL) ஏற்பாடு செய்து இருக்கின்றது.
- உலகெங்கிலும் உள்ள தானியங்கி எரியூட்டுதல் தொடர்புடைய நிபுணர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இது ஒரு பொதுவான தளத்தை வழங்குகின்றது.
- தானியங்கித் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மையமானது ஹரியானாவில் உள்ள மானேசரில் அமைந்துள்ளது.
- இந்த அமைப்பானது உலகத் தரம் வாய்ந்த முன்னணி தானியங்கி சோதனை, சான்றிதழ் மற்றும் ஆராய்ச்சி & வளர்ச்சி சேவை வழங்குநராக உள்ளது.
- இது இந்திய அரசின் NATRiP என்ற அமைப்பின் (தேசிய தானியங்கி சோதனை மற்றும் ஆராய்ச்சி & வளர்ச்சி உள்கட்டமைப்புத் திட்டம்) கீழ் செயல்படுகின்றது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### இட்ரிஸ் எல்பா – குளவி இனம்

- இந்த வகைக் குளவியானது சமீபத்தில் மெக்சிகோவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- மார்வெல் சினிமாடிக் யுனிவர்ஸ் என்ற சினிமா தயாரிப்பு நிறுவனத்தினுடைய தோர் என்ற திரைப்படத்தில் ஹெய்டால் (கதாபாத்திரத்தின் பெயர்) என்பவராக நடித்ததற்காக அறியப்பட்ட இட்ரிஸ் எல்பா என்பவரது பெயர் இந்தக் குளவிக்கு சூட்டப் பட்டுள்ளது.
- இது மற்றொரு பூச்சியின் முட்டைகளில் ஒட்டுண்ணியாக வாழ்வது கண்டறியப் பட்டுள்ளது.
- பக்ராடா வண்டு என்று அழைக்கப்படுகின்ற இந்தப் பூச்சியானது, முட்டைக்கோஸ் வகையைச் சேர்ந்த காய்கறிகளை அதிக அளவில் பாதிக்கின்ற ஒரு முக்கியப் பூச்சியாகும்.

### சிறப்பு டீசல்

- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குளிர்காலங்களில் பூஜ்ஜியம் டிகிரிக்கும் குறைவான வெப்பநிலையை (மைனஸ் 30 டிகிரி செல்சியஸ் வரை) எதிர்கொள்ளும் அதிக உயரமுள்ள லடாக் பகுதி மக்களுக்குப் பயன்படும் வகையில் சிறப்பு குளிர்கால தர டீசல் விநியோகத்தை அறிமுகப் படுத்தினார்.
- கடுமையான குளிர்கால சூழ்நிலையில் ஏற்படும் எரிபொருள் இழப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஐ.ஓ.சி.எல்) நிறுவனமானது இதை உருவாக்கியது.
- இது BS-VI தரத்திற்கான BIS விதிகளையும் பூர்த்தி செய்கின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கோல்டன் லீஃப் விருது (தங்க இழை)

- ஆந்திராவின் குண்டூரில் அமைந்துள்ள இந்தியப் புகையிலை வாரியத்திற்கு, நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் நடந்த "டேப் எக்ஸ்போ - 2019" என்ற நிகழ்வில் கோல்டன் லீஃப் விருது வழங்கப் பட்டுள்ளது.
- இந்தியப் புகையிலை வாரியம் கௌரவிக்கப் படுவது இது இரண்டாவது முறையாகும்.
- இந்த அமைப்பானது 2014 ஆம் ஆண்டில், மின்னணு ஏல முறையை அமல்படுத்தியதற்காக இந்த விருதைப் பெற்றது. மேலும் இந்த வாரியமானது இந்தியாவில் பொலிவிலைப் புகையிலைகளை விற்பனை செய்வதை மிகவும் வெளிப்படையானதாகவும் பொறுப்புக் கூறக்கூடியதாகவும் ஆக்கியுள்ளது.
- இந்தியாவில் பொலிவிலை வர்ஜீனியா (Flue-Cured Virginia) புகையிலை சாகுபடியில் பல்வேறு நிலைத்தன்மை (பசுமை) முயற்சிகளைத் தொடங்குவதற்கான முயற்சிகளுக்காக, 2019 ஆம் ஆண்டிற்கான பொது சேவை முன்முயற்சிப் பிரிவில் அதற்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- புகையிலைத் துறையில் தொழில்முறைச் சிறப்பையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிப்பதற்காக 2006 ஆம் ஆண்டில் புகையிலை ரிப்போர்ட்டர் என்ற சர்வதேச பத்திரிகையினால் கோல்டன் லீஃப் விருதுகள் உருவாக்கப் பட்டுள்ளன.
- உலகின் நான்காவது பெரிய பொலிவிலை வர்ஜீனியா புகையிலை உற்பத்தியாளர் நாடு இந்தியாவாகும்.
- ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் உள்ள சுமார் 88,000 பொலிவிலைப் புகையிலை விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பங்கள் இந்தப் பயிரை தங்கள் வாழ்வாதாரத்திற்காக நம்பியுள்ளனர்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஹர்மீத் தேசாய்

- இந்தோனேசியாவின் படாமில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பு நடத்திய 2019 ஆம் ஆண்டிற்கான இந்தோனேசியா ஓபன் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்திய டேபிள் டென்னிஸ் வீரர் ஹர்மீத் தேசாய் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.
- இவர் தனது சக நாட்டவரான அமல்ராஜ் அந்தோனியை இப்போட்டியில் தோற்கடித்தார்.
- இது வெளிநாட்டு மண்ணில் ஹர்மீத் பெற்ற முதல் பட்டம் ஆகும்.
- 2019 ஆம் ஆண்டு ஜூலையில் ஒடிசாவின் கட்டாக்கில் நடைபெற்ற காமன்வெல்த் சாம்பியன்ஷிப்பை வென்ற பிறகு, இது அவரது ஒட்டுமொத்த இரண்டாவது சர்வதேச பட்டமாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★